# இணைய இதழ்கள் எதிர்கொள்ளும் தொழில் நுட்ப பிரச்சினைகள்

சிபிச்செல்வன்
உதவி ஆசிரியர், உலகத்தமிழ் இணைய இதழ்
356, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை. திருவல்லிக்கேணி, சென்னை 600 005, இந்தியா.
e-mail:<sibichelvan2003@yahoo.co.in> / <sibichelvan2000@yahoo.co.in>

---

இணையம் வழியாக இதழ்கள் நடத்துவதில் பெரிய சரிவுகள் ஏற்பட்டு ஓய்ந்த சமயத்தில் எங்கள் உலகத்தமிழ் இணையம் ஆரம்பிக்கப்பட்டது. எந்த விதமான லாபத்தையும் எதிர்பார்க்காமல் தமிழை வளர்க்கும் ஆர்வத்தினால் ஸ்ரீராம் சிட் நிறுவனத்தினர் உலகத்தமிழ் இணையம் நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்தனர். இந்த முயற்சியில் ஈடுபட அவர்களுக்கு ஏற்கனவே "சுபமங்களா" என்ற இலக்கிய இதழ் நடத்திய அனுபவம் இருந்ததும் ஒரு காரணம். கோமல் சுவாமிநாதன் இறந்த பிறகு சுபமங்களா நின்றுவிட்டது. அதற்கு மாற்றாக ஒரு இதழ் ஆரம்பிக்க வேண்டியிருந்த சமயத்தில், தொழில் நுட்பங்களில் ஏற்பட்ட அபாரமான வளர்ச்சியை மனதில்கொண்டு, உலகத்தில் உள்ள தமிழர்களையெல்லாம் ஒன்றிணைக்கும் முயற்சியாகத் உலகத்தமிழ் இணைய இதழ் தொடங்கப்பட்டது.

வருடத்திற்கு இரண்டு கோடி ரூபாய் கலை இலக்கிய வளர்ச்சிக்காக ஸ்ரீராம் சிட் நிறுவனத்தினர் வழங்கி வருகிறார்கள். அவர்களின் உலகத்தமிழ் இணைய இதழ் நடத்துவதற்குக் காலச்சுவடு கண்ணன் உதவினார். உலகத்தமிழ் இணைய இதழ் தொடங்குவதற்கான பூர்வாங்க வேலைகள் கடந்த 2002 மார்ச் மாதம் தொடங்கியது. முதற் கட்டமாகக் கணினி தொழில் நுட்பத்திற்கான உதவிகளைச் செய்வதற்கு ஸ்ரீராம் சிட்நிறுவனத்தினரின் சைபர் டெக் என்ற அமைப்பினர் உலகத் தமிழ் ஆரம்பிப்பதற்கான பணிகளைச் செய்ய ஆரம்பித்தனர்.

முதல் பிரச்சினையாக, எந்த எழுத்துருவில் இணைய தளத்தை வடிவமைப்பது என்பதாகத் தொடங்கியது. இதற்காக தமிழகத்தைச் சேர்ந்த கணினி வல்லுநர் ஆண்டோ பீட்டர், ஜெர்மனி நா. கண்ணன், சுபா கனகசுந்தரம், பெங்களூர் நண்பர் மகாலிங்கம் போன்றவர்களிடம் ஆலோசனை கோரப்பட்டது.

ஆப் லைனில் படிப்பதற்கு வசதியாக டைனமிக் பாண்ட் ஒன்றை டவுன் லோட் செய்துகொள்வதற்கு ஒரு எழுத்துருவை ஏற்பாடு செய்தோம். இதற்கிடையில் கணினியில் இணைய இதழைக் கொண்டுவருவதற்குப் படைப்புகளுக்கான தொடர்புகளை ஏற்பாடு செய்தோம். தமிழகத்தைச் சேர்ந்த படைப்பாளிகளிடம் மட்டுமே படைப்புகளைக் கேட்காமால், உலகளாவிய அளவில் தொடர்பு கொள்ள மின்னஞ்சல் உதவியது. ஆனால் அவர்கள் அனுப்பிய படைப்புகளை எங்களிடம் இருந்த எழுத்துருக்களைக்கொண்டு படிப்பதற்கு வசதிகளோ, அதற்குரிய தொழில்நுட்ப வசதிகளின் பரிச்சயமோ மிகக் குறைவாக இருந்தது.

இந்தப் பிரச்சினையை எதிர்கொள்வதற்காக உதவியதுதான் பாண்ட் கன்வெர்ட்டர். இதை ஒரு வசதியாகக் கருதினாலும் இந்த வசதியைக் கொண்டு அப்படியே எழுத்துரு மாற்றி இணைய தளத்தில் போட்டுவிட முடியாது. ஒரு எழுத்துருவிலிருந்து இன்னொரு எழுத்துருவிற்கு மாற்றும்போது சில எழுத்துருக்கள் விடுபட்டுப்போனதும் நடந்தது. ஆகையால் சில சமயங்களில் எங்களுக்கு வரும் படைப்புகளை அப்படியே ஒரு பிரதி அச்சு எடுத்து அதை மீண்டும் கணினியில் தட்டச்சுச் செய்து அவற்றை இணையத்தில் போட வேண்டிய நெருக்கடி ஏற்பட்டது.

இவற்றிற்குப் பிறகு இணைய தளத்தில் பக்கங்களை வடிவமைக்கும் பணிகள் தொடங்க அப்போது வேறு சில புதுப் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஒரு கட்டுரையின் பக்கத்திலிருந்து இன்னொரு கட்டுரையின் பக்கத்திற்குப் போக வேண்டியிருந்தால் அதற்கான தொடர்புகள் ஒழுங்காகப் போகத் தொடங்காது. இதையும் எதிர்கொண்டு சமாளித்த பிறகு வேறு வகையான தொழில்நுட்ப பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

உலகத்தமிழ் இணைய இதழின் முதல் இதழை இணையத்தில் பிரசுரம் செய்ததும் பல்வேறு நாடுகளிலிருந்த நண்பர்கள் படித்தார்கள். இதில் சில பேருக்கு அவர்களின் கணினியில் இருந்த பிரவுசர் சப்போர்ட் செய்யவில்லை என்ற புகார் எழுந்தது. எக்சுபுளோரரில் சிலருக்குத் தமிழ் எழுத்துருக்கள் பெட்டி பெட்டியாகத் தெரிந்தது. நெட்சுகேப் பிரவுசரில் இந்தளவிற்குக்கூட தெரியவில்லை. இந்தத் தொழில்நுட்ப பிரச்சினையை எதிர்கொள்ளவதற்கான முயற்சியிலும் வெற்றி பெற்ற பிறகு பிரச்சினை அதோடு முடிந்துவிடவில்லை.

ஒரு கணினி வாசகரிடமிருந்தும் இதழைப் பற்றிய எந்தக் கடிதமும் வரவில்லை. இதழை யார் படிக்கிறார்கள் என்று எந்த விவரமும் தெரியவில்லை. ஆனால் இதழில் அதிகம் பேர் படிக்கிற பக்கங்களாக இலக்கியம், சினிமா, ஆன்மீகம், மொழி ஆகியன இருக்கின்றன.

மொழியின் பக்கங்களில் கணினித் துறை சார்ந்த குறிப்பாக எழுத்துருக்கள், என்கோடிங்கினால் எழுகிற பிரச்சினைகள், சொல்திருத்தி, தமிழ் ஓசிஆர், தமிழ் கணினி இதழ் நடத்துபவர்களின் அனுபவங்கள் போன்ற துறைகளில் கட்டுரைகளும் வெளி வந்தன. தமிழகக் கணினி துறை வல்லுநர்களான இளங்கோ, கிருஷ்ணமூர்த்தி, செல்லப்பன், ஆண்டோ பீட்டர், முரசு முத்து நெடுமாறன் போன்றவர்களின் விரிவான நேர்காணல்கள் வெளிவந்திருக்கின்றன. இதில் இளங்கோவின் பேட்டிக்குக் கணினித் துறை சார்ந்தவர்களின் எதிர்வினைகள் ஏராளமாக வந்தன. முத்து நெடுமாறன் பேட்டிக்கும் நிறைய வாசகர்கள் தங்களின் எதிர்வினைகளை அனுப்பிவைத்திருந்தார்கள். அருண் மகிழ்நன், கல்யாணசுந்தரம், மணி மணிவண்ணன், மு.ஆனந்த கிருஷ்ணன் போன்றவர்களின் பேட்டிகளை எங்கள் கைவசம் வைத்திருக்கிறோம். உரிய நேரத்தில் அவை வெளிவரும். இவை தவிர இன்னும் நேர்காண வேண்டியவர்களின் பெரிய பட்டியல் ஒன்று உள்ளது. குறிப்பாகத் தமிழ்க் கணினியில் நடைபெறும் மாற்றங்களைப் பதிவு செய்வதற்கான வேலைகளை உலகத்தமிழ் தொடர்ந்து செய்துவருகின்றன. எதிர்காலத்திலும் தமிழ்க்கணினியில் நடைபெறுகிற எல்லா விசயங்களுக்கும் உலகத்தமிழ் அக்கறை காட்டும்.

சமூகம், கலை, இசை, ஓவியம், நாடகம் போன்ற பகுதிகள் இருந்தன. எத்தனைப் பேர் அந்தப் பகுதிகளுக்கு வருகை தருகிறார்கள் என்று வாசகர்களின் வருகையைக் மவுஸ் கிளிக் எண்ணிக்கையின் அடிப்படையில் கணக்கிட முடிந்தது. ஆனால் இன்றுவரையில் வாசகர்களின் கடிதங்கள் அல்லது எதிர்வினைகள் மிகக் குறைவாக வருவதற்கான காரணமாக நாங்கள் நினைப்பது எந்த எழுத்துருவில் தங்களின் வாசக அனுபவங்களை அனுப்புவது என்பதுதான் வாசகர்களின் பிரச்சினையாக இருக்கிறது என்பதுதான். இன்று வரையிலும் எங்களுக்கு மிக அதிகமாக வரும் கடிதங்கள் ஆங்கிலத்தில்தான் உள்ளன என்பது வருத்ததிற்குரியது.

எத்தனையோ எழுத்துரு மாற்றிகள் (பாண்ட் கன்வெர்ட்டர்) நடைமுறையில் இருப்பினும் அவற்றின் பயன்பாடு என்பது இணையத் தளத்தில் மிகுந்த பரிச்சயமுள்ளவர்களுக்கு மட்டுமே சாத்தியமுள்ளதாக இருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. சமீபத்தில் ஒரு நண்பருக்குக் கணினியிலிருந்து தமிழில் ஒரு கடிதம் எழுதினேன். அவரிடமிருந்து ஒரு வேண்டுகோள் கடிதம் வந்தது. தயவுசெய்து ஒரு குறிப்பிட்ட encoding font-இல் மட்டும் அனுப்பவும். ஏனெனில் உங்கள் கடிதத்தை இரண்டு மூன்று முறை கன்வர்ட்டரில் மாற்றம் செய்த பிறகுதான் படிக்க முடிகிறது என எழுதியிருந்தார். இத்தனைக்கும் அவர் தொழில்நுட்ப அறிவும் எல்லா கணினி மென்பொருள்

சார்ந்த வசதிகளையும் உடையவர். அவருக்கே இதுதான் நிலைமையெனில் ஒரு சாதாரண கணினி அறிவுள்ளவர்க்கு கணினி பயன்பாடு என்பது எப்படி வெகு சரளமானதாக இருக்கும்? இதற்கு என்ன தீர்வுகாணப் போகிறோம் என்பது ஒரு பெரிய கேள்விக்குறி. ஏற்கனவே இருக்கும் வசதிகளை வாசகர்களுக்கு அல்லது கணினி உபயோகிப்பாளர்களுக்கு எப்படி ஒரு விழிப்புணர்வு மூலம் நடைமுறையில்கொண்டு வரப்போகிறோம் என்று தெரியவில்லை.

இந்த இடத்தில் இன்னொரு விசயமும் ஞாபகம் வருகிறது. டாம் எழுத்துருக்கள் வசதியாக இருக்கும் என்றுதான் தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளையும் போடவேண்டிய இடத்தில் தேவை கருதி போடுகிறோம். இதை இணையத் தளத்தில் போடும் போது நன்றாகக் கவனித்துப் போடாவிட்டால், ஆங்கில எழுத்துருக்கள் எல்லாம் ஜிகிவி ஜிகிவி ஜிகிவி என அர்த்தமற்ற தமிழ் எழுத்துருக்களாக மாறி விடுகின்றன. இதை ஒருமுறைக்கு இரண்டு முறை கவனம் எடுத்துப் பார்க்காவிட்டால் இதற்கான எதிர்வினைகள் தொலைபேசி வழியாகவும், மின்னஞ்சல் வழியாகவும் வரும். ஆப் லைனில் படிக்கும் போதும், அதை பிரிண்ட் எடுத்துப் படிக்கும்போதும் இந்தப் பிரச்சினை சதா தொடர்கிறது.

இணைய தளத்திற்கு வரும் கட்டுரைகளைக் கன்வெர்ட்டரில் மாற்றும் போதும் இதைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. இப்போது பல செய்தித்தாள்களில்கூட அடைப்புகளில் ஆங்கில எழுத்துகள் வரவேண்டிய இடத்தில் அது சரியாக மாறியிருக்கின்றனவா என்று கவனமாகப் பார்க்காததன் விளைவாக இந்த ஜிகிவி ஜிகிவி பிரச்சினையைக் காண முடிகிறது. ஆக இது இணைய தளத்திற்கான பிரச்சினை மட்டுமேயல்ல என்பதையும் இந்தப் பிரச்சினையை எப்படி எதிர்காலத்தில் தீர்க்கப் போகிறோம் என்றும் தெரியவில்லை. அதே சமயத்தில் இந்தப் பிரச்சினையை எளிதாக விட்டுவிட்டால் ஜிகிவி ஜிகிவி என்றால் என்னவென்ற கேள்வி எழும். இந்த எழுத்துருக்களில் சேமிக்கப்பட்டுள்ள தரவுகளெல்லாம் எதிர்காலத்திலும் நமது சந்ததியினர் பயன்படுத்துவார்கள் என்பதையும் நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். தொழில்நுட்ப ரீதியாக இதற்கு ஒரு மாற்று வழியாக ஏதாவது ஒரு தீர்வு காண வேண்டும். அந்தளவிற்கு இது மிக முக்கியமான பிரச்சினை.

இணைய இதழ்கள் என்பது புலம்பெயர்ந்த தமிழர்களுக்கானது என்ற தோற்றமும் தமிழ் நாட்டில் இருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்பது சொல்லாமலே விளங்கும். இந்தியாவில் இருக்கும் தகவல் தொழில்நுட்ப பெருமைகள் எவ்வளவுதான் இருந்தாலும் அது இன்னும் போதாத அளவில்தான் உள்ளது. தமிழகத்தில் உள்ள படைப்பாளிகள் தங்களின் படைப்புகளைக் கணினி இதழ்களுக்குக் கொடுக்கத் தயங்குகிறார்கள். அதற்கு அவர்கள் சொல்லும் காரணம் தங்களின் படைப்புகளை யார் படிக்கிறார்கள் என்று எந்த விவரமும் தங்களுக்குத் தெரியவருவதில்லை என்பதுதான். இதற்கு மிக முக்கியமான காரணம் அந்தப் படைப்பாளிகளுக்கு இணைய இதழ்களைப் பற்றிய பரிச்சயம் இல்லாதது ஒரு காரணம். சிலருக்குக் கணினி வசதியில்லை என்பதும் ஒரு காரணம். இன்னும் சிலருக்குக் கணினி இருக்கும் ஆனால் அவர்களுக்கு இணைய இதழ்களைப் படிக்குமளவிற்குத் தகவல் தொழில்நுட்ப வசதிகள் (தொலைபேசி இணைப்பு, அதற்கான தொடர்பு ஒழுங்காக இருக்காது, அடிக்கடி தொடர்பு அறுந்து போதல், தொலைபேசி, இணைய இணைப்பிற்கான கட்டணங்களின் கூடுதல் சுமை போன்றவை). இதற்குச் சரியான உதாரணம் இது. சமீபத்தில் வெளிநாட்டிலிருந்து வந்திருந்த ஒரு நண்பர் இந்தியா வந்த பிறகு பதினைந்து நாட்களாக இணையத்தையே பார்க்க முடியவில்லை என்று சொன்னார். அவரால் தினசரி மின்னஞ்சல்களைக்கூடப் பார்க்க முடியவில்லையாம். அந்தளவிற்குத்தான் தகவல் தொழில்நுட்ப வசதிகள் இந்தியாவில் உள்ளன.

இப்போது 54 இதழ்களைக்கொண்டு வந்தபின் வேறு வகையான பிரச்சினை எழுந்துள்ளது. இதுவரையில் வெளியிட்டுள்ள இதழ்களிலிருந்து எந்த எந்தத் தலைப்புக் கட்டுரைகளைச்

சேமித்து வைப்பது (ஆர்கேவில்), அதற்குக் கணினியில் எவ்வளவு இடம் வேண்டியிருக்கும் என்பதுதான் அது.

தமிழை இணையத்தில் ஏற்றுவதில் இப்போது மேலும் சில பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. இவ்வளவு நாள் TAM/TAB/TSCII encoding எழுத்துருக்களோடு, தற்போது யூனிகோடும் சேர்ந்துள்ளது. இந்த யூனிகோடு மீஸீநீஷீபீவீஸீரீ எழுத்துகளுக்கு Google போன்ற சர்ச் இன்ஜின்களில் தேடும் வசதியைச் செய்துகொடுத்துள்ளார்கள். இந்நிலையில் நாம் எதிர்கொள்ள வேண்டிய பிரச்சினை நாம் ஏற்கனவே சேகரித்த எல்லாத் தகவல்களையும் (Data Base) யூனிகோடிற்கு மாற்றம் செய்ய வேண்டும். இதற்காகும் நேரம், பணம், உழைப்பு போன்றவற்றைப் பற்றிக் கவலைப்படாமல், தமிழின் எதிர்கால நலனை உத்தேசித்துச் செயல்பட வேண்டும்.

யூனிகோடிற்கு மாறுவதற்கு இதுவரை இணையத்தில் உள்ள தமிழ்ப் பக்கங்களை எளிதில் மாற்றிக்கொள்வதற்கு இணைய தளங்களை நடத்துபவர்கள் தயாராக வேண்டும். இப்போது யூனிகோடில் உள்ள இணைய தளங்களையும் அவற்றின் பக்கங்களையும் தேடிப் படிக்க விழைந்தால், அவை பெரும்பாலும் படிக்க முடியாத எழுத்துகளாக இருக்கிற நிலையில், வாசகர்களுக்கு எளிதில் இணைய தளங்களைப் பார்வையிடுவதற்கான வசதிகளையும் கவனத்தில் கொண்டு அதற்குரிய பணிகளைச் செய்ய வேண்டும்.

ஏற்கனவே தங்களது இணைய தளங்களை ஏதாவது ஒரு encoding எழுத்துருவில் செய்தவர்களுக்கு இந்தப் பிரச்சினை இருக்கிறதென்றால் இப்போது புதிதாக ஓர் இணையத் தளத்தைத் தாமே வடிவமைக்க இருக்கிறவர்களுக்கு உதவுகிற வகையில் எளிமையாகவும் எளிதாகவும் கிடைக்கிற வகையில் எந்தப் ஃபாண்ட்டும் இல்லை என்பதே உண்மை. ஏதாவது ஓர் எழுத்துருவில் வடிவமைத்தால் குறிப்பிட்ட சிலர்கூடப் பார்க்க முடியாத நிலைமையே இன்றுவரை தொடர்கிறது. ஆங்கிலத்தில் ஓர் இணையத் தளத்தை அமைக்க வேண்டுமானால் இதுபோன்ற பிரச்சினைகள் வருவதில்லை. இவ்வளவு தொலைவு நாம் பல்வேறு தொழில்நுட்ப சிக்கல்களை எதிர்கொண்டு, அவற்றைக் கடந்து வந்திருக்கிறோம். அதுபோலவே தரப்படுத்தப்பட்ட ஒரே மாதிரியான encoding என்பதை யூனிகோடு சாத்தியப்படுத்திவிடும்போது இதுபோன்ற தொழில்நுட்ப பிரச்சினைகள் நீங்கிவிடும். அந்த நாள் வெகு தொலைவில் இல்லை.